Verified RealEstate™

RE REGULATORY RECORD

RERA Document

The document as the regulator published it, reproduced in full behind this page.

Published for reference. The authority's own register is the operative record.

Verified RealEstate™
3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai 600 097, India

hello@verified.realestate
+91 9996 12 9996
verified.realestate

DIGITALLY VERIFIED RECORD

Proceedings of the Commissioner of
PARAMAKUDI MUNICIPALITY

PRESENT: A KANNAN

D.Dis.No. 44/2024/F1 Dated : 16-Apr-2024

Sub: TOWN PLANNING - PARAMAKUDI MUNICIPALITY

S.No 7/5 of
EMANESHWARAM Village -
Approved - Regarding.

ORDER

Permission is hereby granted to Mr.R Yasar Arabath to Layout of S.No. 7/5 of EMANESHWARAM Village Into 85 plots subject to the following condition. The approved plans are sent herewith.

The Layout of plot should be in accordance with the approved plan.

Encl: Approved Plan
To
Mr.R Yasar Arabath
893, VAIGAINAGAR 12TH CROSS STREET, Vaigai Nagar,
Manjalpattinam

Commissioner,
PARAMAKUDI MUNICIPALITY

16.04.2024

CONDITIONS	
S.No.	**Condition Name**
1	1
2	Note: (a) This permit is furnished by / virtue / of power delegates by CMDA under Sec. (3) of section 9-C of Tamil Nadu Town and country planning Act 1971 (Act 35 of 1972)
3	(b) According to section 79 of the T & C P Act 1971 (Act 35 of 1972) as amended by Act 22 of 1974 any person aggrieved by any decision or under of the planning authority under section 49 of sub section (1) section 54 may appeal to the Government within two Months from the date on which the decision or order was communicated
4	(c) The member secretary, chennai metropolitan development authority reserves the right to revoke or modify the planning permission in the event of planning permit having been granted based either or wrong information furnished by the applicant or by misrepresentation of the facts or by any lapse or procedural formalities to be followed or permit having been obtained by any fradulent manner

பரமக்குடி நகராட்சி ஆணையர் (மு கூ பொ)அவர்களின் செயல்முறைகள்.

முன்னிலை : திரு. அ .கண்ணன், பி. ஏ.,

ந.க.எண்.44/2024/எப்1 நாள்.16.04.2024

பொருள் : மனைப் பிரிவு – பரமக்குடி நகராட்சி – வார்டு பி, பிளாக் 4, நகரளவை எண்.7/5,–ல் அமைந்துள்ள இடத்தில் உதவி இயக்குநர், நகர் ஊரமைப்புத் துறையின் முலம் மனைப்பிரிவு அமைக்க தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ள இடத்திற்கு – இறுதி ஒப்புதல் அளித்து – உத்திரவிடுதல் – சம்மந்தமாக.

பார்வை : 1. உதவி இயக்குநர், நகர் ஊரமைப்புத் துறை, இராமநாதபுரம் மாவட்டம், அவர்களின் தொழில்நுட்ப அனுமதி ந.க.எண். OSP4BGW8 / 2022/ RAMA / 2023/TCP, நாள் 07.07.2023 (மனைப்பிரிவு ஒப்புதல் எண். SWP/DTCP/RAMANATHAPURAM LAYOUT No. 24/2023(O))

2. தானப்பத்திரம் எண்.1736/2023, நாள்.28.06.2023

3. தங்களுடைய விண்ணப்பம் நாள் 10.01.2024

4.இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம், நாள் 5.02.2024

5, தங்களுடைய இணையதள விண்ணப்பம் எண். 134/CP/23–24/0004806, நாள். 19.02.2024

6. தங்களுடைய கடிதம் நாள் 20.02.2024

7. இந்நகர மன்ற தீர்மான எண்.829 நாள்.07.03.2024

8. கட்டணம் செலுத்திய நாள்.19.03.2024

****

உத்திரவு :–

பார்வை 1–ல் கண்டுள்ள உதவி இயக்குநர், நகர் ஊரமைப்புத் துறை, இராமநாதபுரம் மாவட்டம், அவர்களின் தொழில்நுட்ப அனுமதியில் பரமக்குடி நகராட்சி – வார்டு பி, பிளாக் 4, நகரளவை எண்.7/5,–ல் அமைக்கப்பட்டுள்ள மனைப் பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கி இறுதி ஒப்புதலுக்கு நகராட்சிக்கு வரப்பெற்றுள்ளது.

பார்வை 2–ல் கண்டுள்ள தானப்பத்திரம் எண்.1736/2023, நாள்.28.06.2023–ல் மனைப்பிரிவில் கண்டுள்ள பூங்கா, சாலைகள் மற்றும் உள்ளாட்சிக்குரிய பகுதிகளை தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. விவரம் கீழ் கண்டுள்ளவாறு.

மணைப்பிரிவு இடத்தின் பரப்பு	14851.1 ச.மீ
சாலைக்குறிய பரப்பவு	4963.3 ச.மீ
உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட பகுதி பூங்கா	993.10 ச.மீ (10.04%)
உள்ளாட்சிக்குறிய பகுதி	62.10 ச.மீ (0.62%)
TANGEDCO உரிய பகுதி	62.5 ச.மீ (0.63%)

பார்வை 3–ல் கண்டுள்ள தங்களது மனுவில் பரமக்குடி நகராட்சி – வார்டு பி, பிளாக் 4, நகரளவை எண்.7/5,–ல் அமைக்கப்பட்டுள்ள மணைப்பிரிவிற்கு அனுமதி வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

பார்வை 4–ல் கண்டுள்ள இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதத்தில் மேற்படி மணைப் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட அடிப்பைடை வசதிகள் பணிகளுக்கு முன்றாம் தரப்பினரிடம் இருந்து சான்று, பூங்காவிற்கு வேலி அமைத்தல் மற்றும் விண்ணப்பத்தினை இணையதளம் வாயிலாக சமர்பிக்க கோரப்பட்டது.

பார்வை 5–ல் தங்களால் இணையதளம் வாயிலாக மணைப்பிரிவு விண்ணப்பம் சமர்பிக்கப்பட்டுள்ளது.

பார்வை 6–ல் கண்டுள்ள தங்களது கடிதத்தில் மேற்படி மணைப் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட இடிப்பைடை வசதிகளான சாலை பணிகள், மழைநீர் வடிகால்வாய் பணிகள், பூங்காவிற்கு வேலி அமைத்தல், குடிநீர் பைப்லைன் பணிகள், மின் கம்பம் அமைத்தல் மற்றும் தெரு மின் விளக்கு அமைத்தல் ஆகிய பணிகள் முடிக்கப்பட்டுள்ளது என்றும், , பார்வை 4–ல் கண்டுள்ள இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதத்தில் மேற்படி மணைப்பிவில் அமைக்கப்பட்டுள்ள சாலை பணிகள், மழைநீர் வடிகால்வாய் பணிகள், குடிநீர் பைப்லைன் அமைத்தல் பணிகள் குறித்து மூன்றாம் நபர் தரச் சான்று வழங்க கோரப்பட்டதை தொடர்ந்து Mohammed Sathak Engineering College East Coast Road, Keelakarai அவர்களிடமிருந்து பணிகள் குறித்தான சான்று , (letter No.MSEC/CIVIL/2023–24/Consulting work/68, நாள். 13.02.2024) பெற்று சமர்பிக்கப்பட்டுள்ளது

பார்வை 7–ல் கண்டுள்ள நகர மன்ற தீர்மான எண்.829 நாள்.07.03.2024ல் இந்நகர் மன்றம் மேற்படி தொழில் நுட்பம் அனுமதி அளிக்கப்பட்டுள்ள மணைப் பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இதனை தோடர்ந்து இவ்வலுவலக கேட்பு அறிவிப்பில் கோரியுள்ளபடி கீழ்காணும் கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளது.

மனைப்பிரிவு ஒப்புதலுக்காக செலுத்தப்பட்ட கட்டண விவரம்

வ. எண்.	கட்டண விவரம்	கட்டணம் ரூ.
1	Application Scrutiny Fees	500.00
2	Development Charges	8500.00
3	Layout fees	35000.00
4	Plot Sub division fees	45000.00
5	Layout future development charge	400000.00
	Total	489000.00

எனவே பரமக்குடி நகராட்சி, வார்டு பி, பிளாக் 4, நகரளவை எண்.7/5, –ல் அமைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கு கீழ் கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. மனைப்பிரிவு நிபந்தனைகளுக்குட்பட்டு மனைகளாக உட்பிரிவு செயது விரும்பி விற்கும் நபர்களுக்கு கிரையம் செய்ய அனுமதிக்கப்படுகிறது. கீழ்கண்டுள்ள நிபந்தனைகள் மீறப்படுமாயின் அதற்கு மனுதாரரே பொறுப்பு ஏற்க வேண்டும். மனுதாரருக்கும், மனைகளை விரும்பி வாங்கும் நபருக்கும் பிற்காலத்தில் தாவா ஏதும் ஏற்படுமாயின் அத்தாவாவுக்கு நகராட்சி நிர்வாகத்தை பொறுப்பேற்க வைக்க இயலாது. அதற்கும் மனுதாரரே பொறுப்பேற்க வேண்டும். மனுதாரர் மனைகளை விற்கும் சமயம் கீழ்கண்ட நிபந்தனைகளையும், மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற வரைபடத்தையும் வாங்குபவர்களுக்கு அதன் நகல் கொடுக்க வேண்டும்.

2. மனைப்பிரிவு பகுதியில் மனைப்பிரிவிற்கு நகராட்சியில் வழங்கப்பட்டுள்ள ஒப்புதல் கடித நம்பரையும் ஒப்பளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தையும் குறிப்பிட்டு தகவல் பலகை ஒன்று மனுதாரர் செலவிலும் பொறுப்பிலும் நடப்பட வேண்டும்.

3. விரும்பி வாங்கும் மனையை கிரையதாரர்களுக்கு பதிவு செய்து கொடுக்கும் பட்சத்தில் மனைப்பிரிவு நிபந்தனைகளின் முக்கிய சாரம்சமான முன்பக்க, பக்கவாட்டு,

பின் பக்க காலி இடம் விடப்பட வேண்டியதன் அவசியத்தை குறிப்பிடப்பட வேண்டும். சாலைகள், பொது உபயோக மனைகள் நகராட்சிக்கு தானம் செய்யப்பட்ட விவரங்களையும் குறிப்பிட வேண்டும்.

4. மனைப்பிரிவு நிபந்தனைகள் அனைத்தையும் காட்டும் மனைப்பிரிவு நிபந்தனைகள் படிவத்தை கிரையப்பத்திரத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

இணைப்பு :

ஓப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைப்படம்

ஆணையர் (முதல் பொ)
பரமக்குடி நகராட்சி.

பெறுநர்

திரு.யாசர் அராபத்,
எண்.897, எஸ்.எம்.நகர்,
மேலூர், மதுரை

நகல்

1, வட்டாட்சியர், பரமக்குடி


2, சார் பதிவாளர், பரமக்குடி

3, உதவி இயக்குநர், நகர் ஊரமைப்புத் துறை, இராமநாதபுரம்

பரமக்குடி நகராட்சி ஆணையாளரின் செயல்முறை
உத்திரவு ந.க.எண்: 44/2024/F1 நாள்: 16.4.2024
என்படி நகர்மன்ற தீர்மான எண்: 829 நாள்: 7.3.2024
மற்றும் உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு
அலுவலகம் இராம. அவர்களின் தொழில் நுட்ப
ஒப்புதல் கண்டிஷன் நிபந்தனைகளுக்கு உட்பட்டு
மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

Commissioner
Paramakudi Municipality

16/4/2024
நகர அமைப்பு அலுவலர்
நகராட்சி அலுவலகம்
பரமக்குடி



நகர் ஊரமைப்பு அலுவலகம்.

இராமநாதபுரம் மாவட்டம்

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகராட்சி, பரமக்குடி வட்டம்,மனோஸ்வரம் கிராமம், பழைய சர்வே எண்-111/1(pt),2(pt), நகரளவு எண்7 / 5 வார்டு B பிளாக்-04 -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம். பரமக்குடி முழுமைத்திட்டத்தில் MR 5 -ல் அமைகிறது.

அளவு 1" =33'0" அல்லது (1:400)

ONLINE APPLICATION NUMBER- OSP4BGW8/2022/RMD

வ

குறிப்பு:

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு	: 3.67 ஏக்கர் (அ) 14851.1 ச.மீ. (As Per Site)
சாலையின் பரப்பு	: 4963.3 ச.மீ.
மனைகளின் பரப்பு	: 9887.8 ச.மீ.
மனைப்பிரிவின் எல்லை	
மனைப்பிரிவு சாலை	
நிலையிலுள்ள சாலை	
கோரிய மனைகள்	: 88 எண்ணம்
ஒதுக்கிய மனைகள்	: 85 எண்ணம் (EWS - மனைகள் (35-42,47-54)
ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு	(மனையிடத்தின் மொத்தப்பரப்பு - சாலையின் பரப்பு) x 10% (14851.1 - 4963.3) x 10%= 988.78 ச.மீ

பொது ஒதுக்கீடு

ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு } (மனையிடத்தின் மொத்தப்பரப்பு - சாலையின் பரப்பு) x 10% = 988.78 ச.மீ

ஒதுக்கிய பரப்பு - 993.10ச.மீ (10.04%)

1) உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது

(மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு - மனைப்பிரிவு சாலையின் பரப்பு)x 0.50%

ஒதுக்கிய பரப்பு - 62.1 ச.மீ (0.62%)

2) TANGEDCO க்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது

(மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு - மனைப்பிரிவு சாலையின் பரப்பு)x 0.50%

ஒதுக்கிய பரப்பு - 62.5 ச.மீ (0.63%)

3) EWS க்கு ஒப்படைக்கப்பட வேண்டிய பொது ஒதுக்கீட்டு பரப்பு

(மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு - மனைப்பிரிவு சாலையின் பரப்பு)x 10%

ஒதுக்கிய பரப்பு - 1075.8 ச.மீ (10.88%) (மனை எண்கள்35-42, 47-54)

கட்டிட வரம்பு:

7.20 மீ (ம) 9.00 மீ அகலமுள்ள சாலைகளுக்கு 1.5மீ விடப்பட வேண்டும்.

மூலை முடக்கு:

12.0மீ-க்கு கீழ் வரை அகலமுள்ள சாலைகளுக்கு 1.5மீ x 1.5மீ விடப்பட வேண்டும்.

நிபந்தனைகள்:

1. இம்மனைப்பிரிவிற்கு நகராட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இத்தில் எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலகங்களுக்கு அனுப்பப்படவில்லை என்றும், உள்ளாட்சி உறுதி செய்யப்பட வேண்டும்.
2. அரசாணை எண்- 21, வருவாய் வளர்ச்சித்துறை நாள்:16.06.2003-ன் படி நில உரிமம் குறித்து உள்ளாட்சி நிர்வாக அதிகாரிக்கு முழு திருப்தி உள்ளது என சான்றளித்துள்ளதன் பேரில் இம்மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
3. அரசாணை எண்.18, ந.தி.(ம)கு.வ.(ந.ப.1)துறை நாள்.04.02.2019, ன் படி அரசு வழிகாட்டு மதிப்பின்படி தொகை செலுத்தப்பட வேண்டும்.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என்று அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர்/ஆணையர் சென்னை, அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்பு துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களையும் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. நகர் ஊரமைப்பு துறை சட்டபூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களான கிரயப்பத்திரம், குத்தகைப்பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்றும் சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்பு துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை எவ்வித மாற்றமும் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவுவாயிலில் 5மீ அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
8. உத்தேச மனைப்பிரிவு அமையும் நிலம் தொடர்பாக நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கது அல்ல.
9. உத்தேச மனைப்பிரிவின் ஊடே நீர்நிலைகள் அமையுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.
10. உத்தேச மனைப்பிரிவின் ஊடே EB LINE, LT LINE மற்றும் TELEPHONE LINE செல்லுமாயின் அதனை சாலையின் ஓரங்களில் ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட வேண்டும்.

குறிப்பு:

அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிக்கப்பட்டுள்ளது.

ம.வ/மா.ந.ஊ.உ.இ.அ(இரா.மா) எண்: 24/2023 (0)

Document certified by Hari Ilam Vazhuthi N
Signed by: Assistant Director
Location: Ramanathapuram
Date 2023.0 ... 59:34

அளவர்/உதவி வரைவாளர்

வரைவாளர் நிலை -3

மேற்பார்வையாளர்

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு துறை
இராமநாதபுரம் மாவட்டம்.

THE LANDLENS SUITE

Eight ways to know a piece of land before you pay for it.

This report covers one part of the picture. These cover the rest, drawn from the same government records, for any property in Tamil Nadu.

LandLens One
Ask anything about a property and get an answer grounded in live government records, with the sources shown.
/landlens/one

Verify My Land
Every record check run on one property and returned as a single report.
/landlens/verify-my-land

Legal Opinion
An advocate's written opinion on the title, built on the records we pull for it.
/landlens

One Map
Every layer on one map: the parcel, its boundary, zoning, water bodies and what sits around it.
/landlens/one/map

PriceMap
What land actually changed hands for around this plot, taken from the registered deeds.
/landlens/pricemap

Build Scope
What you are allowed to build here: floor space, height, coverage and setbacks.
/landlens/build-scope

Property Tracker
Watch a property and hear about it when something new is registered against it.
/landlens/property-tracker

Deal Room
Run the transaction in one place: documents, stamping, signatures and the parties.
/landlens/deal-room

FREE TOOLS · NO ACCOUNT NEEDED

Twenty-four checks you can run yourself, at no cost.

Records and verification

The registers themselves, read for you.

- Encumbrance Certificate
- Patta and Chitta
- Field Measurement Sketch
- EC Analyzer
- Bank charge check
- Court case search
- Seller background check
- Approval check by survey

Value and duty

What it is worth and what it costs to register.

- Guideline value by street
- Guideline value by survey
- Stamp duty and registration fees
- Capital gains
- Floor space index
- Area unit converter

Zoning and land use

What the plan says can happen on this land.

- Land use zone finder
- CMDA land use check
- Coastal regulation zone
- Master plan check
- Water bodies finder
- Airport height clearance

Registers and directories

Who holds it, and which office keeps the record.

- Find your registering office
- Temple property check
- Waqf property check
- RERA register

Every free tool
/tools

Services we run for you
/services

The LandLens suite
/landlens/one

Verified RealEstate™

Every claim in this document traces back to a government record.

- Legal opinions, due diligence and title verification
- Building plan, layout and sub-division approvals
- Completion and occupancy certificates, regularisation
- Escrow, negotiation and NRI property management
- Land survey, soil testing, architecture and construction

Verified RealEstate
3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai 600 097, India
hello@verified.realestate
+91 9996 12 9996

Prepared from the registers named on the page each finding sits on. Where a register could not be read, this document says so in its place rather than leaving the gap to be read as a clean result.